# திருப்பாணாழ்வார் அருளிச் செய்த
# அமலனாதிபிரான்

---

## அமலனாதிபிரான் தனியன்கள்

### பெரிய நம்பிகள் அருளிச் செய்தது

ஆபாத$_3$ சூட$_3$மநுபூ$_4$ய ஹரிம் ஶயாநம்
மத்$_4$யே கவேர து$_3$ஹிதுர் முதி$_3$தாந்தராத்மா |
அத்$_3$ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிஶ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ||

### திருமலை நம்பிகள் அருளிச் செய்தது

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடை உந்தி *
தேட்டரும் உதர பந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய் *
வாட்டமில் கண்கள் மேனி முனி ஏறித் தனி புகுந்து *
பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோமே

---

# திருப்பாணாழ்வார் அருளிச் செய்த
# அமலனாதிபிரான்

927 ** அமலன் ஆதி பிரான் * அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் * விண்ணவர் கோன் * விரையார் பொழில் வேங்கடவன் **
நிமலன் நின்மலன் நீதி வானவன் * நீள் மதிள் அரங்கத்தம்மான் * திருக்
கமல பாதம் வந்து * என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே 1

928 உவந்த உள்ளத்தனாய் * உலகம் அளந்து அண்டமுற *
நிவந்த நீள் முடியன் * அன்று நேர்ந்த நிசாசரரை **
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் * கடியார் பொழில் அரங்கத்தம்மான் * அரைச்
சிவந்த ஆடையின் மேல் * சென்றதாம் என சிந்தனையே 2

929 ** மந்தி பாய் * வட வேங்கட மாமலை * வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் * அரங்கத்து அரவின் அணையான் **
அந்தி போல் நிறத்து ஆடையும் * அதன் மேல் அயனைப் படைத்தது ஓர் எழில் *
உந்தி மேல் அதன்றோ * அடியேன் உள்ளத்து இன்னுயிரே 3

930 சதுரமா மதிள் சூழ் இலங்கைக்கு இறைவன் * தலை பத்து
உதிர ஓட்டி * ஓர் வெங்கணை உய்த்தவன் * ஓத வண்ணன் **
மதுரமா வண்டு பாட * மாமயில் ஆடரங்கத்தம்மான் * திருவயிற்று
உதர பந்தம் * என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே 4

931 பாரமாய * பழ வினை பற்று அறுத்து * என்னைத் தன்
வாரம் ஆக்கி வைத்தான் * வைத்தது அன்றி என்னுள் புகுந்தான் **
கோரமா தவம் செய்தனன் கொல் அறியேன் * அரங்கத்தம்மான் * திரு
ஆர மார்பு அதன்றோ * அடியேனை ஆட்கொண்டதே 5

932 துண்ட வெண்பிறையன் * துயர் தீர்த்தவன் * அஞ்சிறைய
வண்டு வாழ் பொழில் சூழ் * அரங்க நகர் மேய அப்பன் **
அண்டர் அண்ட பகிர் அண்டத்து * ஒரு மாநிலம் எழு மால் வரை * முற்றும்
உண்ட கண்டம் கண்டீர் * அடியேனை உய்யக் கொண்டதே 6

933 கையினார் * சுரிசங்கு அனல் ஆழியர் * நீள் வரை போல்
மெய்யனார் * துளப விரையார் கமழ் நீள் முடி எம்
ஐயனார் ** அணி அரங்கனார் * அரவின் அணை மிசை மேய மாயனார் *
செய்ய வாய் ஐயோ! * என்னைச் சிந்தை கவர்ந்ததுவே 7

934 பரியனாகி வந்த * அவுணன் உடல் கீண்ட * அமரர்க்கு
அரிய ஆதிப் பிரான் * அரங்கத்து அமலன் முகத்து **
கரியவாகிப் புடை பரந்து * மிளிர்ந்து செவ்வரி ஓடி * நீண்ட அப்
பெரியவாய கண்கள் * என்னைப் பேதைமை செய்தனவே! 8

935 ** ஆலமா மரத்தின் இலை மேல் * ஒரு பாலகனாய் *
ஞாலம் ஏழும் உண்டான் * அரங்கத்து அரவின் அணையான் **
கோலமா மணி ஆரமும் * முத்துத் தாமமும் முடிவில்லது ஓர் எழில் *
நீல மேனி ஐயோ! * நிறை கொண்டது என் நெஞ்சினையே 9

936 ** கொண்டல் வண்ணனைக் * கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் * என் உள்ளம் கவர்ந்தானை **
அண்டர் கோன் அணி அரங்கன் * என் அமுதினைக்
கண்ட கண்கள் * மற்றொன்றினைக் காணாவே 10

**திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்**

---